# Gospel Truth

# காஸ்பல் ட்ரூத்

**உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்**

ISSUE - 9 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 9



## பாபேலிலிருந்து அந்நிய பாஷை வரை

‘‘அப்பொழுது கர்த்தர் நாம் இறங்கிப்போய்,ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பேசுவதை தாறுமாறாக்குவோம் என்றார்...அதின் பேர் பாபேல் எனப்பட்டது (ஆதியாகமம் 11 : 6-9 ).

நோவாவின் நாட்களில், ஜலப்பிரளயத்துக்குப் பின்பு தேவனுடைய பார்வையிலே, ஜனங்கள் மிகவும் பொல்லாத வர்களாய் காணப்பட்டார்கள்.அவர்கள் தங்கள் இருதய மேட்டிமையினாலே வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டி அதற்கு பாபேல் என பெயரிட்டனர். ஆகவே பெருமை கொண்ட அவர்களின் விக்கரகாராதனையை தடைசெய்யும் பொருட்டு, தேவன் அவர்களுடைய பாஷையை தாறுமாறாக்கினார்.

முன்பு பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது (ஆதி 11 : 1).ஒரே பாஷை இல்லாதபடியினால் அவர்கள் சேர்ந்துகொள்ளாமல் பூமியின் மீதெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். இதுதான் உலகில் பற்பல பாஷைகள் தோன்றிய இடம்.

2000 ஆண்டுகளுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே நாளின் போது, இயேசுகிறிஸ்துவை பின்பற்றிய 120 பேர் எருசலேமின் மேல்மாடியிலே ஒருமனப்பட்டு,ஒன்றாக கூடி ஜெபித்தபோது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள் (அப்போ 2 : 2-4).



**பாபேலில், பாஷைகளால் மக்கள் சிதறடிக்கப்பட்டார்கள். பெந்தெகொஸ்தே நாளில்,அந்நிய பாஷையின் வரங்களினால் ஜனங்கள் ஒருமனப்பட்டார்கள்.ஆகவே சுவிசேஷத்தை விளங்கிக் கொள்ளுங்கள்**

வானத்தின் கீழிருக்கிற யூதர்கள் முதலான சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள மனுஷர்கள் இந்த மகத்துவத்தைக் கண்டு பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.

அங்கேயிருந்த மனுஷரில் சிலர் சீஷர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம் பண்ணினார்கள். கர்த்தராகிய தேவன் அங்கே கூடியிருந்த தேவபிள்ளைகள்மேல் பரிசுத்தஆவியை ஊற்றினதையும், அவர்கள் பற்பல பாஷைகளில் பேசின மகத்துவத்தையும் சுவிசேஷத்தின் வாயிலாக அறிந்துள்ளோம்.

அநேக மதப்பாகுபாடுகளைக் கொண்ட இந்த உலகில் பலர், அன்றைய பெந்தெகொஸ்தே நாளின்போது நடந்த அந்நிய பாஷை பேசுதலைக் குறித்து கூறுவதுண்டு. உண்மையிலே என்ன நடந்தது? சீஷர்கள் என்னென்ன பேசினார்கள்? அந்நிய பாஷை என்பது ஆவிக்குரிய பரலோக தூதர்களுடைய பாஷையா?

இது இறையியலாரையோ, உணர்வையோ, தனிப்பட்ட ஒருவருடைய அனுபவத்தையோ சார்ந்ததல்ல.தேவனுடைய வார்த்தை இந்த ஆவிக்குரிய வரத்தின் மறைபொருளை வெளிப்படுத்துகிறது.

அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள் (அப்போ 2 : 6). ஆகவே சீஷர்கள் புரியாத, தூதர்களின் பாஷையிலே பேசவில்லை என இதிலிருந்து


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் பக்கம் - 3<br>கிரேக்க மொழியிலிருந்து பக்கம் - 4 | அந்நியபாஷை பேசுதல்<br>பக்கம் - 5-7 | ஜெபிக்கும் பாஷை<br>பக்கம் - 8-9 | 1 கொரி 14 பக்கம் - 10-11<br>கேள்விக்கென்ன பதில் பக்கம் -11 | உங்களுக்குத் தெரியுமா?<br>பக்கம் -12 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;

மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,

எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;

தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;

1 கொரி 12 : 12-13 ; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;

வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;

1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;

1 கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;

உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;

2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;

2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15 ;

தெளிவாகப் புரிகிறது. கூடியிருந்த ஜனங்களிலே கலிலேயராகிய மனுஷர்கள் (அநேகர் படிப்பறிவற்ற மீனவர்கள்) பலவிதமான பாஷைகளைப் பேசுபவர்கள். அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே (அப்போ 2 : 8).ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ரோமிலிருந்து வந்த ஜனங்கள் (அப்போ 2 : 9- 11) இந்த மகத்துவத்தை எண்ணி ஆச்சரியப்பட்டார்கள்.

சீஷர்கள் அந்த பாஷைகளை அறிந்திருக்கவில்லை.தேவஆவியின் தூண்டுதலினால் மற்ற பாஷைக்காரர்களுக்குப் புரியும் வகையில் அந்நிய மொழியிலே பேசினார்கள்.அவர்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே போதித்து, தீர்க்கதரிசனமாய் உரைத்தார்கள். நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே (அப்போ 2 : 11 ).ஆவிக்குரிய இந்த வரம் பேசுபவர்களுக்குத்தான். கேட்பவர்களுக்கல்ல.உதாரணமாக பேதுரு, ஆசியவைச் சேர்ந்த ஒரு கூட்ட ஜனங்களுக்குப் போதனை செய்திருக்கிறார்.யோவானும் அரேபிய பாஷைக்காரருக்குப் போதித்திருக்கிறார்.

பாபேலிலே ஜனங்கள் தங்களுக்குள்ளே தாங்கள் பேசுகிற பாஷையை அறியாததினாலே சிதறிப் போனார்கள்.பெந்தெகொஸ்தே நாளின்போது போதிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை பற்பல பாஷைகளிலே பேசக் கேட்டார்கள்.

பல தேசங்களைச் சார்ந்த அனைத்து ஜனங்களும் இரட்சிப்பின் போதனையே அவரவர் பாஷையிலே கேட்டு அறிந்துகொள்ள முடிந்தது.

எல்லா துதியும், பரிசுத்த ஆவியானவர் வழியாய் தம் சீஷர்களுக்கு அந்நிய பாஷையின் வரத்தை அருளிய இயேசுகிறிஸ்துவுக்கே பாபேலிருந்து பெந்தெகொஸ்தே பிரிவிலிருந்து ஒற்றுமை, குழப்பத்திலிருந்து தெளிவு, பாவத்திலிருந்து இரட்சிப்பு

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 - கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

" அப்பொழுது பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து அவர்களை நோக்கி...
– அப்போ 4 : 8

பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டதும், கீழே விழவில்லை, தள்ளாடவில்லை, முணுமுணுக்கவில்லை, வாயினால் குழப்ப வார்த்தைகளைக் கூறவில்லை.ஆனால் தைரியமாகவும், தெளிவாகவும், உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை நிறைந்த விசுவாசத்தோடும் பேசினார்.பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் என்பது எவ்வளவு ஆச்சரியமான அனுபவமாய் நம் வாழ்வு பரிசுத்தமாய் அமைய வழிவகுக்கிறது.

இந்த இதழில் அந்நிய பாஷையைக் குறித்து எழுதியுள்ளேன்.இது ஒரு பெரிய தலைப்பு.ஆகவேதான் இதனை விவரிப்பதற்காக அதிக பக்கங்களை கொடுத்துள்ளோம்.பெந்தெகொஸ்தே நாளின் போது என்ன நடந்தது என்பதை வேதாகமம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது.முன்பு தங்களுக்குத் தெரியாத பிற பாஷைகளில் தேவனுடைய சத்தியத்தை தேவஆவியின் அனுக்கிரகத்தினால் தெளிவாகப் பேசினார்கள்.சாத்தான் இந்த சம்பவத்தின் மூலமாக அநேகரை வஞ்சித்து, பரிசுத்தஆவியின் அனுபவத்தை, தவறாகப் புரிந்துகொள்ள செய்கிறான்

எளிதில் புரிந்துகொள்ள முடியாத வகையில் பேசுதல் என்பது பெந்தெகொஸ்தே சபைகளில் மாத்திரமல்ல, பல ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகளிலும் காணப்படுகிறது. எந்தவொரு பயமும் இல்லாமல், தேவனுடைய நாமத்தினாலே நான் அறிக்கையிட்டு சொல்லுகிறேன். இந்த பயனில்லாத ஆவி, பரிசுத்த ஆவி அல்ல. இது முற்றிலுமாக தேவனுடைய சத்திய வார்த்தைக்கும், அவருடைய போதனைக்கும் எதிரானது.இதைக்குறித்து சிலர் நான் பரிசுத்தஆவிக்கு விரோதமாக பேசுகிறேன் என்று கூட எண்ணலாம்.நான் ஏற்கனவே இதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவனாயிருக்கிறேன்.ஆனால் தேவ வார்த்தையின் ஒளியிலும், ஆவிக்குரிய சத்தியத்தை வெளிப்படுத்துவதிலும் ஆவலாய் நிற்கிறேன்.

எளிதில் புரிந்துகொள்ள முடியாத வகையில், அந்நிய பாஷை பேசுதல் என்கிற பழக்கத்தை ஊக்குவிப்பதை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாத்திரமல்ல, மற்ற நாடுகளிலும் இதை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.பல சபைகளைச் சேர்ந்த போதகர்களின் போதனையை கவனிக்கும்போது, நான் தெரிந்துகொண்டது மற்றவற்றைக் காட்டிலும் சாத்தான் இந்த காரியத்தில் உள்குழப்பத்தை உருவாக்குகிறான்.இயேசுகிறிஸ்துவின் வழியிலும், அவருடைய ஜெபத்திலும் நிலைநிற்கவும், அவரைப் பின்பற்றவும் போதுமானதாக அந்த போதனை இல்லை.

இன்று பல சபைப்பாகுபாடுகளில் நாமும் அஞ்ஞானிகளைப் போல ஜெபத்திலே அலப்பிக் கொண்டிருக்கிறோம்.ஒருவர் இதைக் குறித்து அனுதாபப்பட்டு ஏற்றுக்கொண்டால் அது பல தீமையான பொல்லாத ஆவிகள் சபைகளுக்குள்ளே கிரியை செய்ய ஏதுவாகி விடும்.உணர்ச்சி, சுற்றியுள்ள சூழ்நிலை, பொல்லாத சாத்தானின் ஆவி என்று எதைக் காரணமாக எடுத்துக்கொண்டாலும் அதன் நோக்கம் உண்மையான ஆவிக்குரிய வாழ்வில் தொய்வை உண்டாக்குவதே.

பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு என்று ஏற்றுக்கொள்ளும் பெந்தெகொஸ்தே ஜனங்களைப் போலவே சில ஏமாற்றும் நயவஞ்சக ஆவிகளும், நாத்திகர்களும் இதையே செய்கிறார்கள்.அவர்கள் பாவத்திலேயே வாழ்ந்துகொண்டு அந்த ஆவி தனக்குள் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

இன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்வில் எதிரியானவன் செய்ய நினைத்த நயவஞ்சகமே இது என நான் நம்புகிறேன்.ஆகவே நாம் விழித்திருந்து ஜெபித்து எதிரியானவனிடமிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வோம்.இருளாக்கப்பட்ட நம் குருட்டு கண்களை கர்த்தர்தாமே திறப்பாராக

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*



# கிரேக்க மொழியிலிருந்து

**டிலக்டாஸ் (டீ-அல்-எக்-டாஸ்)**

கிரேக்க அகராதி : பேசும் முறை

**டயலக்ட்** : மொழி, பாஷை, நாவு

**க்ளோசா (க்ளோஸ்-ஆ)**கிரேக்க வார்த்தையில் நாவு அல்லது பாஷை என பொருள்

Thayer's Greek Lexicon:Glossa

1.நாவானது சரீரத்தில் பேச உதவும் உறுப்பு

2.tongue குறிப்பிட்ட இன மக்களின் பாஷை. இது மற்ற தேசங்களிலிருந்து மாறுபட்டது.

க்ளோசலாலியா (க்ளாஸ்-அ-லே-லீ-ஆ) இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து பெறப்பட்டது.

Glossa மொழி அல்லது நாவு

lalia பேச்சு.இது அந்நிய பாஷை பேசுதல் என பொருள்.ஆனால் இன்று ஆவிக்குரிய பாஷை அல்லது ஆவியில் நிறைந்து பேச பல இறையியலாளர்கள் பழக்குவிக்கிறார்கள்.

**மிரியம் – வெப்ஸ்டர் அகராதி**

மிகுந்த உணர்ச்சிபூர்வமாக பேசுவது ஒத்திசைவான பாஷை பேசுதல் போன்ற தோற்றமளிக்கும்.குழப்பமான புரியாத வகையில் பேசுதல் என்பது கேட்பவர்களுக்கு புரியாது. சில மதங்களில் இந்த பழக்கம் பின்பற்றப்படுகிறது.

செனகிளோசியா (சி-னு-க்ளாஸ்-இ-ஆ) இரண்டு கிரேக்க வார்த்தைகளான Xenos (அந்நியர்) Glossa என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது.இன்னொரு நாட்டினருடைய பாஷையை வேறொரு நாட்டைச் சேர்ந்த அந்த பாஷையை அறியாதவர் பேசுவது. அப்போது அந்நிய நாட்டை சேர்ந்தவர்களுக்கு இவர் பேசுவதை விளங்கிக்கொள்ள முடியும். இது புரியக்கூடிய பாஷையே.

**இந்த செய்தியின் நோக்கம் Glossalalia என்பது அறியப்படாத ஒரு மொழியின் வார்த்தைகளை அர்த்தம் தெரியாமல் உச்சரிக்கும் ஜனங்களின் பழக்கத்தைக் குறிப்பது [எளிதில் புரியாத பாஷை]**

கிரேக்க மொழியிலிருந்து சரியாக மொழிபெயர்க்கப்பட்ட நாவுகள் என்கிற வார்த்தையின் அர்த்தத்தை புரிந்துகொள்வது அவசியம். வேதத்தை மொழிபெயர்க்கும்போது சில வார்த்தைகள் தவறான புரிந்துகொள்ளுதலினால் தவறான கொள்கைகளை பின்பற்ற காரணமாகி விடுகிறது.

அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்திலும், 1 கொரிந்தியரிலும் எங்கேயெல்லாம் Glossa என்கிற வார்த்தை உபயோகிக்கப் பட்டிருக்கிறதோ அதற்கு பாஷைகளை பேசுதல்

அதாவது புரிந்துகொள்ளக் கூடிய மொழி என பொருள்படும். ஒருபோதும் அது புரியாத வகையில் பேசுதல் என பொருள்படாது.Glossolalia

பெந்தெகொஸ்தே நாளில் தேவமனுஷர்கள் பூமியிலுள்ள பாஷைகளில் தமக்கு முன்பு தெரியாத ஆனால்

அந்நியர்களுக்குத் தெரிந்த அவரவர்களுடைய வேறு வேறு மொழியிலே தங்கள் நாவுகளால் பேசினார்கள்.இதுதான் Xenoglossia ன் உதாரணம்.நாவு tongues மொழிபெயர்ப்பானது Dialektos மற்றும் Glossa ஆகிய இருவேறு கிரேக்க வார்த்தைகளிலிருந்து வந்தது.ஆகவேதான், சீஷர்கள் அவர்களது ஜென்ம பாஷைகளல்லாத வேறு பாஷைகளல்லாத வேறுபாஷைகளில் பேசினார்கள் என புரிகிறது.

அப்போ 2: 4 அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (Glossa )

அப்போ 2 : 6 ...திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள் (Dialektos)

அப்போ 2 : 8 நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? (Dialektos)

அப்போ 2 : 11 ...நாம் நம்முடைய பாஷைகளிலே (Glossa) இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்கிறோமே

பெந்தெகொஸ்தே நாளில் பெறப்பட்ட ஆவிக்குரிய வரமாகிய அ ந்நிய பாஷை பேசுதல் வேதத்தை தியானித்தபிறகு, தெளிவாக விளங்குகிறது. இது ஆவியின் வரத்தையும், அதன் அர்த்தத்தையும் tongue நாவுகளின் பொருளையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

# அந்நிய பாஷையில் பேசுதல்

**வேதமே நமது வழிகாட்டி**

அந்நிய பாஷை பேசுதல் என்கிற களிப்பூட்டும் ஆச்சரியமான நிகழ்வு இன்று உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களல்லாதவரிடமும் வியாபித்திருக்கிறது. பரிசுத்தஆவியின் பெயராலே இன்று கிறிஸ்தவ இயக்கங்களிலே வேகமாகஇது பரவிக் கொண்டேயிருக்கிறது.தேவ வார்த்தை நமக்கு வழிகாட்டி.மேலும் மாம்சீக வெளிப்பாடுகளோ, ஒருவருடைய கருத்துகளோ அல்லது அனுபவமோ அல்ல, வேதத்தில் சொல்லப்பட்டுள்ள சத்தியத்தின் கோட்பாடுகளை மாத்திரமே வழிகாட்டியாக கருத வேண்டும்.வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எல்லா நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ 3 : 16).

**கள்ள போதகத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்**

கிறிஸ்து சபைக்கு பின்வரும் எச்சரிக்கையை கூறுகிறார்.


கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24 : 24 ). சாத்தான் தீமைகளோடு மட்டும் வருபவனல்ல.

ஒளியின் தூதனாக வேஷமிட்டு அற்புத அடையாளங்களை செய்கிறான்.தவறுகளை களைந்து, சத்தியத்தை தழுவிய நடக்கை முக்கியமானது.பலர் தவறான போதனைகளால் வஞ்சிக்கப்பட்டு விடுகிறார்கள்.இது ஆவிக்குரிய பலரது வாழ்வின் பெலத்தை தவறான எண்ணங்களுக்குட்படுத்துகிறது.

இப்போதிருக்கிற சபைகளில் அந்நியபாஷை பேசுதல் என்பது உண்மையான பரிசுத்த ஆவியானவரால் அல்ல.ஒவ்வொரு தேவபிள்ளையும் அந்நிய பாஷை என்பதை சரியாக புரிந்துகொண்டு, பலவிதமான தவறான போதனைகளைக் குறித்து விழிப்பாயிருக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

**நவமான பாஷைகளில் பேசுதல்**

இயேசுகிறிஸ்து தம் சீஷர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன : என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்(Glossa-மாற்கு 16 : 17).வேதாகம சுவிசேஷங்களிலே அந்நிய பாஷையைக் குறித்து வரம் அல்லது அடையாளம் என்று சொல்லப்பட்டுள்ளது இந்த ஒரே இடத்தில்தான். இந்த அடையாளமானது பெந்தெகொஸ்தே நாளின்போது ஆச்சரியமான விதமாக நிறைவேறிற்று.எல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு...வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப்போ 2 : 4)



**பெந்தெகொஸ்தே அனுபவம்**

**சீஷர்கள் அந்நிய பாஷையை தெளிவாகவும், வெவ்வேறாகவும் பேசினார்கள்**

திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டார்கள்...( Dialektos) (அப்போ 2 : 6) . சீஷர்கள் நவமான அல்லது அந்நிய மொழியில் பேசினார்கள்.தாங்கள் பேசின பாஷையை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

சீஷர்கள் குழப்பமாகவோ அல்லது எளிதில் புரிந்துகொள்ள முடியாத வகையிலோ பேசவில்லை. அந்நிய பாஷையிலே தெளிவாகப் பேசினார்கள்.அதன் பிறகு தான் இஸ்ரவேலுக்கு புறம்பான பல தேசங்களில் சுவிசேஷம் சொல்லப்பட்டது.

பல ஜனங்கள் ஆவிக்குரிய ஞானஸ்நானத்தைப் பெற்று, பெந்தெகொஸ்தே அனுபவத்துடன் அந்நிய பாஷை பேசுகிறார்கள்.இது உண்மையானால் மனிதர்கள் பேசும் பிற மொழிகளைத்தானே அவர்கள் பேச வேண்டும்.ஏன் அதற்குப் பதிலாக குழப்ப வார்த்தைகளைக்கொண்டு பல சபைகளில் இன்று விசுவாசிகள் அந்நியபாஷை என்ற பெயரை சொல்லிக் கொள்கிறார்கள்.

**அந்நியபாஷை வரம்**

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.ஆவியானவர் ஒருவரே

(1 கொரி 12 : 4 ).ஆவியானவர் எல்லோருக்கும் ஒரே மாதிரியான வரங்களைத் தரவில்லை.எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு... அறிவை உணர்த்தும் வசனமும்....வேறொருவனுக்கு ... விசுவாசமும்... வேறொருவனுக்கு ... குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது (1 கொரி 12 : 8-11). இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும், தேவராஜ்யத்தின் சுவிசேஷத்திலும் பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கும்படி தேவன் பரிசுத்தஆவியின் வரங்களைத் தந்தருளினார். பெந்தெகொஸ்தே நாளில் நடந்த அந்நியபாஷை பேசுதலின் வரமானது, பாஷைகளை அறிந்திராத பிற ஜனங்களுக்கு, அவரவர்களுடைய ஜென்மபாஷையிலே ஆவிக்குரிய தேவமனிதர்களைக் கொண்டு ஆவியானவர் பேசும்போது, அது அவர்களுக்கு சுவிசேஷம் சொல்ல ஏதுவாகும்.Glossa என்ற வார்த்தை (மொழி) 1 கொரி மற்றும் அப்போ 2 ல் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வரம் என்பது மனிதருடைய பாஷையல்லாத குழப்ப வார்த்தைகளைப் பேசுவது அல்ல.மாறாக மற்ற பாஷைக்காரர்களுக்குப் புரியக்கூடிய ஒரு பாஷையே அந்நியபாஷையின் வரம் என்பது Glossalalia என்ற Xenoglossalalia ஆகும்.

**ஆவிகளைப் வியாக்கியானம் பண்ணும் வரம்**

ஆவிகளைப் பகுத்தறியும் வரம் என்பது சிறப்பான தாலந்து கேட்கிறவர்களுக்குப் புரியாத ஒரு பாஷையை ஒருவர் பேசும்போது அதனை பகுத்தறிந்து பேசுவதே அந்த வரமாகும்.பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் ஆவிக்குரிய வரமாகிய அந்நியபாஷை பேசுதலால் நிரப்பப்படாமல் இருந்தால் அங்கு கூடிவந்திருந்த ஜனங்களுடைய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு போதிக்கும்படியாய் ஒருவர் அங்கே தேவைப்பட்டிருப்பார். அடிக்கடி ஜனங்கள் இனிமையாக குழப்பவார்த்தைகளைப் பேசும்போது, தங்களுக்கு அதை மொழிபெயர்த்துச் சொல்ல ஒருவர் தேவை என்கிறார்கள்.இது உண்மையான ஆவியின் வரமாகிய அந்நியபாஷைக்கும், பகுத்தறிதலுக்கும் அப்பாற்பட்டது.அந்நியபாஷையின் வரத்திற்கு பகுத்தறிய ஒருவர் தேவைப்படவில்லை.அவரவர்கள் தங்கள் தங்கள் பாஷைகளில் அவர்கள் பேசுவதை தாங்களாகவே விளங்கிக்கொண்டார்கள்.

பவுல் கூறுகிறார் இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழிகளையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன் (1கொரி 12 : 31). 14 வது அதிகாரத்திலே அந்நிய பாஷையைக் காட்டிலும் சபைக்கு பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கதாக தேறுங்கள் என்கிறார்.நாமெல்லாரும் ஒரே மாதிரியான ஆவிக்குரிய வரத்தைப் பெறவில்லை.ஆனால் எல்லோரும் தேவஆவியைப் பெற்றிருக்கிறோம்.

**அந்நியபாஷைக்கு வேதத்திலுள்ள உதாரணங்கள்**

பெந்தெகொஸ்தே நாளைப்போல, மேலும் இரண்டு பகுதிகள் வேதாகமத்தில் பரிசுத்தஆவியையும், அந்நியபாஷையையும் குறித்து கூறப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே நாளுக்கு சில வருடங்களுக்குப் பின்பு, பேதுரு கொர்நெலியுவின் குடும்பத்தார்மேல் பரிசுத்தஆவி வரக் கண்டார்.அடுத்து பேதுருவோடு கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள் (அப்போ 10 : 45-46).... பேதுரு பேசத் தொடங்கினபோது, பரிசுத்தஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே அவர்கள்மேலும் இறங்கினார் (அப்போ 11 : 15). அதேபோல் எபேசுவில் யோவான்ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்ற சீஷர்கள் மேல் பவுல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்.அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் ( Glossa ) பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள் (அப்போ 19 : 6).

பெந்தெகொஸ்தே நாளில் மாத்திரம் கூடியிருந்த விசுவாசிகள்மேல் பரிசுத்தஆவி ஊற்றப்படவில்லை. மாறாக யாரெல்லாம் கர்த்தருக்காக தன் இருதயத்தை திறந்து என்னை நிரப்பும் என்று வேண்டிக் கொள்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொருவர் மேலும்

பரிசுத்தஆவியானவர் தம் வல்லமையால் நிரப்புவார். அந்நியபாஷையின் வரத்தையும் தருவார். மேலும் எல்லா சம்பவங்களிலும் அந்நியபாஷை பேசும்போது அவைகள் கேட்கிறவர்களுக்கு புரிந்த தெளிவான பாஷையில்தான் பேசினார்களே தவிர குழப்பமான புரியாத வகையில் பேசவில்லை. இந்த நவமான பாஷைகளின் வரத்தினால் அதைக்கொண்டு அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்து போதனை செய்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அனைவருக்கும் அறிவித்தனர்.

**எல்லோரும் அந்நியபாஷை பேசமுடியாது**

Glossalalia என்று சொல்லக்கூடிய புரியாத வகையில் பேசுதல் என்கிற பழக்கத்தை ஊக்குவித்து இதுதான் பரிசுத்தஆவியின் அடையாளம் என்று சொல்லி பல சபைகளில் போதிக்கப்படுகிறது. இது தவறாக புரிந்துகொள்வது மட்டுமல்ல, வேதத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மையான அந்நியபாஷையின் வரத்தால் எல்லோரும் நிரப்பப்படுவதில்லை என்பதே உண்மை. ஏனெனில் கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தில் ஒவ்வொரு அவயவங்களுக்கு ஏற்றாற்போல் தேவன் அவரவர்களுக்கு வரங்களைத் தருகிறார்.

ஆகவேதான் 1 கொரி 12 : 28-30 ல் பவுல் இவ்வாறு கூறுகிறார். எல்லோரும் அப்போஸ்தலர்களா? எல்லோரும் தீர்க்கதரிசிகளா? எல்லோரும் போதகர்களா? எல்லோரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? இதற்கு பதில் உறுதியாக இல்லை. மேலும் எல்லோரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா? எல்லோரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லோரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? பதில் இல்லை.

**அந்நியபாஷை (நவமான பாஷை ) என்பது ஒருவிதமான வரம்**

அப்போ 2 ல் கூறப்பட்டுள்ள சம்பவத்தில் 120 பேர் மாத்திரமே ஆவியில் நிறைந்து அந்நியபாஷை பேசினார்கள். அதில் பலர் பரிசுத்தஆவியில் நிரப்பப்பட்டார்கள். ஆனால் அந்நியபாஷை பேசவில்லை. சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக்கொண்டதையும் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதையும் அறிந்து பேதுருவும், யோவானும் அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள் (அப்போ 8 : 14-17).

அவர்கள் அந்நியபாஷை பேசவில்லை. ஏன் பவுல் கூட பரிசுத்தஆவியைப் பெற்றும், அந்நியபாஷை பேசவில்லை. மிக முக்கியமாக இயேசுகிறிஸ்து தம்மேல் தேவஆவியானவர் இறங்கியபோதும் கூட அந்நியபாஷை பேசவில்லை. பரிசுத்தஆவியால் நிரப்பப்படுகிற ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள அந்நியபாஷையில் பேசுதல் என்பது ஒரு கட்டளையோ அல்லது பழக்கமோ இல்லை.

பரிசுத்தஆவியால் நிரப்பப்படுகிற தேவ ஜனங்கள் ஒருபோதும் கண்டிப்பாக அந்நியபாஷை பேசும்படியாக கட்டளையிடப்படுவதில்லை. கிறிஸ்துவே அதை செய்யவில்லை. அந்நியபாஷையில் பேசுதல் ஆவிக்குரிய ஒருவகை வரம். அது விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது (1கொரி 14 : 22).

**பரிசுத்தமாய் வாழும் வல்லமைக்கு பரிசுத்தஆவியைக் குறித்த அடையாளம்**

(கலா 5 : 22 - 23 ) ல் சொல்லப்பட்டுள்ள ஆவியின் கனிகளைத் தந்து வாழ்வதே உண்மையான பரிசுத்த வாழ்வின் அடையாளம். இந்த ஆவியின் கனியினாலேயே ஒரு மனிதனின் ஆவிக்குரிய ஜீவியம் வெளிப்படும். பலர் அந்நியபாஷை பேசுதல் என்பதை தவறாகவும் புரிந்துகொள்ளமுடியாத குழப்ப வார்த்தைகளைக் கொண்டும் பேசுகிறார்கள். அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்டதுபோல் நடித்து பாவத்தோடும், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்களாயும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆவியானவர் பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணுகிறவர்

---

**அந்நிய பாஷை பேசுதல் (அ) நவமான பாஷை பேசுதல் என்பது ஒருபோதும் பரிசுத்தஆவியால் நிரப்பப்பட்ட எல்லோரும் பழகக்கூடிய காரியம் அல்ல. கிறிஸ்து தாமே கூட அதை செய்துகாட்டவில்லை**

---

**முடிவு**

மனிதரால் உணர்ந்து அறியக்கூடிய அந்நியபாஷை பேசுதலின் ஆவிக்குரிய வரத்தை பெந்தெகொஸ்தே நாளின் சம்பவம் மூலம் நாம் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது. இந்த பழக்கமானது பல மக்களிடையே மூடநம்பிக்கையாகவே இருப்பது போல் தோன்றுகிறது. இந்த அனுபவத்தோடே அனுதின பாவவாழ்க்கையில் இருக்கும்போது, உண்மையான பரிசுத்தஆவியின் அனுபவம் எங்கே?

பரிசுத்தஆவிக்கு ஒத்திசைவான ஆவி தேவனுக்கு எதிரான ஆவி. பரிசுத்தஆவியின் பரிபூரணமான பலனை வெளித்தோற்றத்தில் காண்பிக்க இயலாது. ஆனால் நீதியிலும், சமாதானத்திலும், சந்தோஷத்திலுமே காண்பிக்ககூடும்

# ஜெபிக்கும் பாஷை

## தூதர்களின் பாஷை



எளிதில் புரிந்துகொள்ள முடியாதபடி பேசுதல் என்னும் கொள்கையோடு ஒன்றிப்போகிற இன்னொரு கொள்கையும் உண்டு.அதாவது தூதர்களின் பாஷை எனப்படும் ஜெபிக்கும் பாஷை.சிலர் இதை பழகிக்கொள்கிறார்கள்.பலர் இதை தனிப்பட்ட ஜெபிக்கும் பாஷை என்கிறார்கள்.இதேமுறையில் அவர்கள் ஜெபிக்கும்போது உபயோகிக்கும் வார்த்தைகளும் அதன் சப்தங்களும் ஜெபிக்கும் அவர்களுக்கும் அர்த்தமுள்ளதாய் இருக்காது. கேட்கிறவர்களுக்கும் அது பயனற்றதாய் அமையும். மேலும் சத்தியம் என்பதின் அளவுகோல் ஒருவருடைய அனுபவம் அல்ல.மாறாக அது தேவனுடைய வார்த்தையில் உள்ளது.

**நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதன் வழிமுறைகள்**

நாம் பரிசுத்தஆவிக்குள் ஜெபம்...பண்ணும்படி போதிக்கப்படுகிறோம் (யூதா 1 : 20).எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி ( எபேசி 6 : 18 ). தேவனுடைய சித்தப்படி எப்படி ஜெபிக்க வேண்டும் என்று அனுதினமும் பரிசுத்தஆவியானவரே நமக்கு வழிகாட்டியாகவும், துணையாகவும் இருப்பார்.மிகுந்த பக்தியோடும், திறந்த உள்ளத்தோடும் பரிசுத்தமாயும் ஜெபிக்கும்படி பரிசுத்தஆவியானவர் ஊக்கமளிப்பார்

**நமக்காக வேண்டுதல் செய்யும் ஆவியானவர்**

ரோமர் 8 : 26 இவ்வாறு கூறுகிறது. ஆவியானவர்தாமே வாக்குங்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.ஜெபிக்கும் பாஷை என்று சொல்லிக் கொள்ளுகிற சிலருக்கு இந்த வேதவசனத்தில் சொல்லப்பட்டுள்ளதை உற்றுநோக்கினால் ஆவியானவர் நம் வழியாகவோ நம் மூலமாகவோ அல்ல, நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

வார்த்தைகளால் விவரிக்கமுடியாத வாக்குக்கடங்கா பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.நம் வாழ்வில் மிகுந்த வேதனையும், உபத்திரவமும் நம்மை நெருக்கும்போது, பரிசுத்தஆவியானவரே அவர்மேல் நம் பாரத்தைச் சுமந்துகொண்டு நமக்காக பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

**மனிதர்களுடைய பாஷையும் தூதர்களுடைய பாஷையும்**

1கொரி 13 : 1 ல் சொல்லப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பவுலின் வார்த்தை....நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும்....என்பது ஜெபிக்கும் பாஷைக்கு ஆதரவாய் இருப்போருக்கு ஏற்ற வசனம். இருந்தபோதிலும் (Though) என்கிற வார்த்தை கிரேக்க மொழியில் நிச்சயமற்றதன்மையைக் குறிக்கும்.if என்று எடுத்துக்கொள்ளலாம்.

---

**தூதர்கள் .....புரியாத பாஷையில் பேசவில்லை. மாறாக கேட்கிறவர்களுக்கு புரிகிற அவர்களுடைய பாஷையிலே பேசினார்கள்**

---

நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும் ....என்பதிலிருந்து பவுல் அப்போஸ்தலரால் எல்லா மனுஷரின் பாஷைகளையும் தூதர்களின் பாஷைகளையும் பேசமுடியாது என தெரிகிறது.அவர் மலையை பெயர்க்கவில்லை.தன் சரீரத்தை சுட்டெரிக்கும்படி கொடுக்கவில்லை.எல்லாவற்றைக் காட்டிலும் அன்பே மேலானது என்பதை எடுத்துரைக்கும் வண்ணமே இவ்வாறு விளக்கம் கூறினார்.

தூதர்களின் பாஷை தெளிவாகவும்,புரியும் வகையிலும் பேசப்படும்போதுதான் நம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.ஒருவேளை மனுஷர்களாகிய நம்மால் தூதர் பாஷையில் பேச முடியுமானால் தூதர்களிடையே அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றும் உணர வேண்டுமே.அநேக வேத விளக்கங்கள் இதற்கு சான்றாக உள்ளது.தூதன் சகரியாவிடம் பேசினார் (லூக் 1 : 13), மரியாளிடம் (லூக் 1 : 30), மேய்ப்பர்களிடம் (லூக் 2 : 10), பேதுருவிடம் (அப்போ 12 : 8).இப்படியே அநேகரிடம் தூதர்கள் பேசினார்கள். ஆகவே கர்த்தருடைய வார்த்தையை கொண்டுவரும் தூதர்கள், பயனில்லாத, புரியாத, பாஷையில் பேசவில்லை. அவர்கள் கேட்கிறவர்களுக்கு விளங்கும்படியான அவரவர்களுடைய பாஷையில்

தான் பேசியிருக்கிறார்கள். 1 கொரி 13 : 8 ல் அன்பு ஒருக்காலும் ஒழியாது.தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்.அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்.அறிவானாலும் ஒழிந்துபோம். அப்படியானால் அந்நியபாஷை என்பது தூதர்களுடைய பாஷையாயின், அது எப்படி ஒழிந்து போம்? இவ்வாறாயின் தூதர்களால் பேசக்கூடுமா? வேதத்தின் வார்த்தைகளில் பவுல் தூதர்களின் பாஷையில் ஒருபோதும் பேசவில்லை.

**பயனற்ற/ தெரியாத ஒன்றை மொழி பெயர்த்தலின்போது சேர்த்தல்**

1 கொரி 14 : 14 – என்னத்தினாலெனில், நான் அந்நிய (விளங்காத – மொழிபெயர்ப்பாளர்களால் சேர்க்கப்பட்டது ) பாஷையிலே ( Glossa ) விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். (பாஷை) உபயோகிக்கப்பட்டுள்ளது

அதாவது அந்நிய மொழி – புரியாதபடி பேசுவது Glossa என்ற வார்த்தை பழைய மொழி பெயர்ப்பின்போது ஒத்திசைவாக வரும்படி அந்நியபாஷை என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது.



ஒருவர் பிறமொழியில் (அந்நியபாஷை) ஜெபித்துக்கொண்டிருப்பாராயின் அது யாருக்கு பயனற்றது? கேட்பவருக்கு, ஏனெனில் கேட்பவருக்கு அவரது தாய்மொழியில் பேசினால்தானே புரியும். 1 கொரி 14 : 16 ல் பவுல் கூறுகிறார். நீ ஆவியோடு ஸ்தோத்திரம் பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படி சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே.

கல்லாதவராயினும், படிப்பறிவற்றவராயினும் பிறமொழிகள் அவர்களுக்குத் தெரியாததினால், கேட்கிற அவர்களுக்கு அது பயனற்றதாயிருக்கும். கற்றவர்களும், படிப்பறிவுள்ளவர்களும் அந்த ஜெபத்தை புரிந்துகொள்வார்கள்.ஆகவே அந்தந்த பாஷை தெரியாதவர்களுக்கு அந்த ஜெபமானது கனியற்றதும் பயனற்றதுமாகவே இருக்கும்.

**வீண் வார்த்தைகளை அலப்பாமல் கிறிஸ்து போதித்த ஜெபிக்கும்விதம்**

இயேசுகிறிஸ்து சொன்ன ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது. மத்தேயு 6 : 7-13.

அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது அஞ்ஞானிகளைப் போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்(7)திரும்ப திரும்ப சொல்லுதல் என்கிற கிரேக்க வார்த்தைக்கு உளறுதல் என்று பொருள்.

நீங்கள் எளிமையாகவும், தெளிவாகவும் ஜெபியுங்கள்.அஞ்ஞானிகளும், விக்கிரக ஆராதனைக்காரர்களுமே தங்கள் ஜெபத்தில் ஒரே வார்த்தையை திரும்ப திரும்ப கூறிக்கொண்டேயிருப்பார்கள்.ஜெப பாஷைக்காரர்களின் பழக்கமும் இதுதான். இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்,அப்படி செய்யலாகாது.

வசனம் 9 ல் நீங்கள் ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது....என்று இயேசு கூறுகிறார்.

**நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்**

மத்தேயு 6 : 7-13

ஆகவே இயேசுகிறிஸ்து மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாத வார்த்தைகளையோ, மொழியையோஅல்லது வேறு பாஷையையோ உபயோகிக்கவில்லை.இயேசுகிறிஸ்து ஒருவேளை தம் ஜனங்கள் அந்நிய பாஷையினாலே ஜெபிக்க வேண்டும் என நினைத்திருந்தால், அவர் ஜெபிக்க வேண்டிய விதத்தை வித்தியாசமாக கற்று கொடுத்திருக்கலாம். கிறிஸ்துவும், பிதாவும் வேறு வேறல்ல, இருவரும் ஒன்றே.

**மனுஷர்களுடைய தவறான கொள்கைக்கு விலகியிருங்கள்**

வேதாகமத்திலே தூதர்களின் பாஷைக்கு எந்தவொரு சான்றும், அடையாளமும் கொடுக்கப்படவில்லை.இது சத்தியத்திற்கு புறம்பானது.தேவனுடையதல்ல.மனுஷீக போதனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் செவிகொடுத்து வழி விலகி சென்று விடாதீர்கள். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருடைய வருகையிலே சமாதானமாய் அவரோடு செல்ல ஆயத்தமாகுவோம்.

# 1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரம்

எளிதில் புரியாத வகையில் பேசுதல் என்பது வேதஆராய்ச்சியற்ற பண்டைய காலங்களில் இருந்துவந்த கிறிஸ்தவர்களின் முறைமைகளில் ஒன்று. இது கிறிஸ்து உருவாக்கியதல்ல. அஞ்ஞானிகளான மனுஷர்களின் பழக்கமே ஆகும்.இதுபோன்றதான பழக்கங்களைக் கொண்ட சபைகள் உணர்ச்சிமிக்க ஜெபத்தோடும், தேவஆவியல்லாத பொல்லாத ஆவிக்கு செவிகொடுக்கிறார்கள்.பாஷை பேச பழக்குவித்தல் என்பது தவறாக தேவனுடைய வல்லமை என போதிக்கப்படுகிறது.பல சபைகளில் இந்த பழக்கம் இல்லை. உண்மையான தேவசபையிலும் இந்த பழக்கம் காணப்படாது.

1 கொரிந்தியர் 14 ஆம் அதிகாரத்தில் அந்நியபாஷையைக் குறித்து பவுல் கூறிய வெளிப்படையான உபதேசத்தை தவறாக புரிந்து கொண்டு பல குழப்பமானது வார்த்தையினால் உண்டாகவில்லை.மாறாக மனிதனால் தான் உருவாகிறது. பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தராகிய தேவன் அந்நிய பாஷையின் வரங்களை அவர்களுக்கு தந்தருளினார். அந்நியபாஷை Glossa என்கிற வார்த்தை அப்போ 2 லும், 1 கொரி 14 லும் உள்ளது.கொரிந்து பட்டணத்திலுள்ள தேவசபைக்கான பவுலின் போதனைதான் இது.



**பவுல் அந்நியபாஷை என்ற புதிய பழக்கத்தைப் போதிக்கவில்லை.மாறாக அந்நிய பாஷையைக் குறித்த அவர்களின் தவறான புரிந்துகொள்ளுதலை தெளிவுபடுத்தவே போதித்தார்**

கொரிந்து பட்டணமானது மிகவும் பெரிய கடற்கரை நகரம்.இந்நகரம் பலதரப்பட்ட கலாச்சாரங்களை உடைய மனிதர்களை கொண்டது.1 கொரி 3 : 3 ல் பவுல், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

1 கொரிந்தியர் புத்தகமானது, முழுவதுமாக மாம்சீகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த ஜனங்களுக்கு,கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து சொல்லி அவர்களை நல்வழிப்படுத்தவே எழுதப்பட்டதாகும்.

1 கொரி 14 ஆம் அதிகாரத்தில் அந்நியபாஷையைக் குறித்து பவுல் அவர்களுக்குப் போதிக்கவில்லை. மாறாக அந்நிய பாஷையைக் குறித்த அவர்களுடைய தவறான எண்ணங்களை உணர்த்தவே போதித்தார்.அவர்கள் சீர்கெட்டுப்போய் ஒழுக்கமற்ற ஜனமாயிருந்தார்கள்

அந்த கூட்டத்தில் ஒருவர் தனக்கு தெரியாத பிறமொழியை (அந்நிய பாஷை) பேசும்போது அப்போது தான் அந்த ஆவியின் வரத்தை உண்மையாய் உணர்வார்கள்.அதாவது பலதரப்பட்ட பாஷை பேசும் ஜனங்களுக்குள்ளே, இந்த தெய்வீக அனுபவமான அந்நியபாஷை வரத்தின் மூலம் ஒரு பாஷையை அறியாதவர் கூட அந்த பாஷையை அறிந்தவர்கள் மத்தியிலே தேவனுடைய வல்லமையை விவரிக்க முடியும்.ஆகவேதான் பவுல் அந்த ஜனங்களை வரங்களை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படியாக அவரைத் தேடுங்கள் என்கிறார்.அந்நியபாஷை பேசுதல் என்று பெருமையுடன் காட்சிப்படுத்துவதை விட, தேவனிடத்திலிருந்து வரும் வார்த்தை அதைக் கேட்கிறவர்களால் விளங்கிக்கொள்ள முடியுமானால் அதுவே பிரயோஜனமுள்ளது.1 கொரி 14 ஆம் அதிகாரத்தின் சில வசனங்களை ஆழ்ந்து அறிந்து கொள்வோம். முதலாவது நாவு (tongue ) என்பது அந்நியபாஷை என பொருள்படும். ( குறிப்பு : ஆங்கில KJV வேதாகமத்தில் தெரியாதது என்கிற வார்த்தை மொழி பெயர்ப்பாளர்களால் சேர்க்கப்பட்டுள்ளது). இது மூலபாஷையான வேதாகம மொழியில் இல்லை.

மேலும் பின் வெளிவந்த மற்ற மொழிபெயர்ப்புகளிலும் இல்லை. வசனம் 2 : அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியால், அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்

ஆகையால் அவ்வாறு பேசுகிறவருடைய பாஷை கூடியிருக்கிற மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தால், அவன் தேவனிடத்தில் பேசுகிறதாய் பவுல் கூறுகிறார்.வசனம் 2-3 ல் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.ஆகவே விசேஷமாய் தீர்க்கதரிசன வரங்களை பெறும்படி நாடுங்கள் என்று பவுல் சொல்லுகிறார். அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கு மாத்திரமே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்

(5)நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளை பேசும்படி விரும்புகிறேன்.ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்

சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன். (6) மேலும் சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து உங்களுக்கு இரகசியங்களை வெளிப்படுத்துவதற்காவது, அறிவுண்டாக்குவதற்காவது, போதகத்தைப் போதிக்கிறதற்காவது ஏதுவானதைச் சொல்லாமல் அந்நியபாஷைகளில் பேசினால் என்னாலே உங்களுக்குப் பிரயோஜனம் என்ன (வசனம் 12 -13 ஐயும் படியுங்கள்)

பவுல், கொரிந்து பட்டணத்தின் ஜனங்கள் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகும்படி தீர்க்கதரிசன வரத்தை நாடும்படி கூறுகிறார் (அந்நியபாஷை குழப்பத்தை உண்டாக்கலாகாது) தீர்க்கதரிசனம் சொல்லப்படும்போது சபைக்கு பக்திவிருத்தி உண்டானால் அது மேன்மையாக எண்ணப்படும்.அங்கிருக்கிற ஜனங்களால் புரிந்துகொள்ள முடியாத பற்பல பாஷைகளை பவுல் பேசினால் அதனால் பிரயோஜனம் என்ன?

(9) அதுபோல, நீங்களும் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்கள். (10) உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது.அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல (11) ஆயினும் பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன்.பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.

எவ்வளவு பெரிதான காரியங்களைக் குறித்துப் பேசினாலும், அது கேட்கிறவர்களால் புரிந்துகொள்ள முடியாவிடில், ஆகாயத்தில் பேசுகிறதாக எண்ணப்படும்.உலகத்தில் பலதரப்பட்ட பாஷைகளும், அவற்றிற்கு அர்த்தங்களும் உண்டு.ஆயினும் பாஷையை அறியாவிடில் அது அர்த்தமற்றதே. ஆகவேதான் பவுல் புரியாத பாஷையில் பேசாதீர்கள் என்கிறார். (வசனங்கள் 14-17, பக்கம் 9 ல் உள்ள தூதர்களின் பாஷையை கவனிக்க)

(22) அந்நியபாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது.(23) ஆகையால் சபையாரெல்லாரும் ஏகமாய் கூடிவந்து, எல்லாரும் அந்நியபாஷையிலே பேசிக்கொள்ளும் போது கல்லாதவர்களாவது, அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால், அவர்கள் உங்களைப் பைத்தியம் பிடித்தவர்களென்பார்களல்லவா? (24) எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில் அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொருவன் உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும்,எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்

பெந்தெகொஸ்தே நாளின்போது பரிசுத்தஆவியானவர் அருளிய அந்நியபாஷையின் வரமானது அவிசுவாசிகளுக்கு அடையாளமாகும்படி காணப்பட்டது.ஏனெனில் பலதரப்பட்ட பாஷை பேசும் ஜனங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள்.தாலந்துகளைப் பெற்றவர்களோ அல்லது பெறாதவர்களோ ஒவ்வொருவரும் வெவ்வேறு பாஷைகளிலே பேசும்போது கல்லாதவர்கள் (பாஷை தெரியாதோர்) அல்லது அவிசுவாசியானவன் உள்ளே வந்தால், பைத்தியம் போல அவர்களுடைய கண்களுக்குத் தோன்றும்.ஆகவே அவிசுவாசிகளின் புரிதலுக்கேற்ப அவர்களுடைய ஜென்மபாஷையிலே போதித்து, அவர்கள் இரட்சிக்கப்பட உதவுங்கள்.

வசனங்கள் 26-28 : பவுல் எல்லா காரியங்களும் ஒழுங்கும், கிரமமுமாய் செய்யப்பட வேண்டும் என்கிறார்.சபையிலே அந்நியபாஷை பேசும்போது அர்த்தஞ் சொல்லுகிறவன் இல்லாவிடில் சபையிலே பேசாமலிருக்க கடவன். அவன் தனக்கும் தேவனுக்கும் தெரிய பேசக் கடவன்.1 கொரி 14 ஆம் அதிகாரத்தை குழப்பத்தோடு புரிந்து கொண்டவர்களுக்கு பவுல் சொல்வது, அவிசுவாசிகளின் நல்லொழுக்கங்களுக்காக, அவர்களுடைய பாஷையிலே, அவர்களுக்குப் புரியும்படி பேசக்கடவோம்.இதுவே அந்நியபாஷை பேசுவதின் அடையாளம் என்பது வேறுமொழி / அந்நியபாஷை என பொருள்படும்.மாறாக அது புரிந்துகொள்ளமுடியாத வகையில் இருக்கும் என்பதல்ல.கடைசியாக பவுல் இவ்வாறாக கூறுகிறார்.சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது (1கொரி 14 : 40).

## கேள்விக் கென்ன பதில்?

நான் அந்நியபாஷையை புரியாத வகையில் பேசுவேனேயாகில் என் இரட்சிப்பைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?

சத்திய ஒளியை நாம் வாழ்வில் காட்டுவது சாபமாகாது.மேலும் நாம் சத்தியத்தை ஏற்றுக்கொண்டதன் விளைவாக பரிசுத்த ஆவியானவர் மெய்யான விடுதலையை தருகிறார்.பல தவறான உபதேசங்களால் ஒன்றுமறியாத ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை தவறாய் புரிந்து வைத்துள்ளார்கள். எதிரியான சாத்தான் தந்திரமாய் செயல்பட்டு சபைக்குள்ளே இந்த பழக்கத்தை கொண்டுவருகிறான்

கர்த்தருக்கு முன்பாக உங்கள் வாழ்வை சோதித்து அறியுங்கள்.நீங்கள் பாவமற்றவராய் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா அல்லது இன்னும் மாம்சத்தின் கிரியைகளைச் செய்கிறீர்களா? பாவம் உங்கள் வாழ்வில் இருக்குமேயானால் நீங்கள் மனந்திரும்ப வேண்டும். நீங்கள் அந்நியபாஷையை பழக்கப்படுத்தி கற்றுக்கொண்டவராயின் உடனடியாக அதிலிருந்து விடுதலை பெற வேண்டும்.பின்பு அது மன்னிக்கப்படும். ஏனெனில் அது சத்தியத்தின் அறியாமை.சத்தியத்தை அறிகிற அறிவே வெளிச்சத்தை கொண்டுவரும்

அந்த பழக்கத்தை தூண்டுகிற ஆவியிலிருந்து விடுதலையடையவும் கர்த்தர் அதை மன்னிக்கவும் அவரிடத்தில் கேளுங்கள்.அந்நிய ஆவியிலிருந்து தேவன் விடுதலை தருவார்.எல்லோரும் சேர்ந்து ஜெபித்து அந்த ஆவியிலிருந்து விடுதலையை பெற்றுக்கொள்ளலாம்

இதுமாதிரியான ஆராதனையை செய்கிறவர்களினின்று உடனடியாக நீங்கள் விலகி, அந்த ஆவியின் தாக்கத்திலிருந்து விடுபடுங்கள்.சத்தியத்திலே உண்மையாய் நடக்கிற தேவனுடைய பிள்ளைகளோடு உங்கள் ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் தெய்வீக விடுதலையையும் ஞானத்தையும் கர்த்தர்தாமே உங்களுக்கு அருள்வாராக.ஆமென்

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION

உங்களுக்குத் தெரியுமா?

களிப்பூட்டும் பாஷைகளைப் பேசும் பழக்கம் கிறிஸ்தவர்களல்லாதவர்களுடையது.இது புறமதம் சார்ந்த பண்டைய கால மற்றும் தற்போதைய பழக்கமே ஆகும். இன்று அநேக கிறிஸ்தவ சபைகளில் இந்த கவர்ந்திழுக்கும் பாஷை பேசும் பழக்கம் உள்ளது.

உலகம் முழுவதிலுமுள்ள பல நாடுகளிலுள்ள, பல மதத்தினரிடையே இந்த பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.அதாவது புத்தமத துறவிகள், எத்தியோப்பியாவின் மதகுருக்கள், மேலும் ஜப்பானியர்கள், மற்றும் ஹெயிட்டியன்களின் ஒரு கூட்டத்தார் , ஆப்பிரிக்காவின் மலைவாழ் மக்கள், இன்னும் அநேகர்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தள்ளிக்கொண்டு போங்கள்

**ஆழத்திலே தள்ளிக்கொண்டு போய் உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார் - லூக் 5 : 4**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படாதவர்களாய் காணப்பட்டார்கள்.திறமைமிக்க மீன்பிடிக்கும் மனிதர்களாகிய இவர்களுடைய முயற்சியும் பிரயாசமும் தோல்வியடைந்தது.இயேசு அவர்களிடம் தள்ளிக்கொண்டுபோய்.....பிறகு வலைகளைப் போடும்படி கூறினார்.

பலமுறை நாம் மீன்பிடிக்கிறோம் அல்லது கிறிஸ்துவுக்காய் பணியாற்றுகிறோம்.ஒரு சிறிய வட்டத்திற்குள்தான் மற்றவர்களைப் போலவே நாமும் இருக்கிறோம்.அது விசாலமான இடமாக இருந்தபோதிலும் மிகவும் குறைவான ஆசீர்வாதத்தையோ அல்லது ஆசீர்வாதக் குறைச்சலோதான் காணப்படுகிறது. ஓடாமல் ஒரே இடத்தில் இருந்துகொண்டு சீஷர்களைப் போலவே நாமும் பிரயாசப்பட்டுக்கொண்டேதான் இருக்கிறோம்.

இயேசுவின் வார்த்தை அருளப்படும்போது, நம்முடைய விசுவாசம் ஆழமானதாக இருக்க அஞ்ச வேண்டாம்.புதிதாய் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டிய இடங்களுக்கு சென்று ஜனங்களை சந்தியுங்கள்.சாந்தமாய் நடந்து தேவனை துதியுங்கள்.நம் சுயத்தை சாகடித்து பிறருக்கு சேவை செய்யுங்கள்.



சிறிதான அல்லது படிப்படியான மாற்றத்தைக் காண்பீர்கள். ஆனால் தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்.நாம் எண்ணிமுடியாத பெரிய மீன்களையும் நாம் நினைத்து பார்க்க முடியாத பெரிய காரியங்களையும் அவர் செய்வார்.நாம் அதைக்குறித்து பேசலாம்.

அதற்காக ஜெபிக்கலாம். ஆனாலும் ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், வலைகளைப் போடாவிடில் அந்த மீன்களை பிடிக்கமுடியாது.குறிப்பிட்ட சில எல்லைகளை நியமித்து நாமே அவரை கட்டுப்படுத்த கூடாது..மாறாக தேவனுடைய விருப்பத்தின் பிரகாரம் நாம் செயல்பட வேண்டும்

முடிவிலே, புதிய ஆவியும், ஆத்துமாவும், மகிமையும், அபிஷேகமும், வல்லமையும், மிகப்பெரிய ஆசீர்வாதத்தையும் சுதந்தரிக்க கர்த்தர் கிருபை செய்வார்.

என் அன்பான ஊழியக்காரரே தள்ளிக்கொண்டுபோய் உங்கள் வலைகளைப் போடுங்கள்.

தொடர்புக்கு:-
ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை
2/227 - கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316